بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ نَحۡمَدُهٗ وَنُصَلِّيۡ عَلٰى رَسُوۡلِهِ الۡكَرِيۡمِ وَعَلٰى عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡدِ

# பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களான ஹஸ்ரத் அபூ உஸைது மாலிக் பின் ரபீஆ ஸாஅதி மற்றும் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது அபூ சலமாவின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13 ஜுலை 2018** அன்று ஆற்றிய **ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், அவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

சஹாபாக்களின் வரிசையில் இன்று நான் இரண்டு சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்களில் ஒருவர் அபூ உஸைது மாலிக் பின் ரபீஆ ஸாஅதி ஆவார்கள். ஹஸ்ரத் மாலிக் பின் ரபீஆ அவர்கள் அபூ உஸைது என்ற தனது பட்டப் பெயரால் அவர்கள் பிரபல்யம் அடைந்தவர்களாவார்கள். அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஸஅதாவோடு தொடர்புடையவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ உஸைது மாலிக் பின் ரபீஆ அவர்கள் சிறிய உயரத்தை உடைய நபராவார்கள். அவர்களது தலை மற்றும் தாடி முடியு நரைத்து விட்டிருந்தது. முதுமையில் அவர்கள் பார்வையை இழந்திருந்தார்கள். ஹஸ்ரத் முஆவிய்யாவின் காலகட்டத்தில் ஹிஜ்ரி 60 வது ஆண்டில் தனது 75 வது வயதில் அன்னார் வஃபாத்தானார்கள். பதர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களில் இறுதியாக அன்னார்தான் வஃபாத்தானார்கள்.

ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் பதர், உஹது, அகழ் மற்றும் அதற்குப் பிறகு நடந்த அனைத்து போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். மக்கா வெற்றியின் போது அவர்களிடம் பனூ ஸஅதா கோத்திரத்தின் கொடி இருந்தது.

ஹஸ்ரத் ஸஹல் பின் ஸஅது அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூ உஸைது ஸாஅதி அவர்கள் தமது திருமணத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைப்பு விடுத்திருந்தார்கள். அந்த நாளில் அவர்களின் மனைவி அன்னாருக்கு தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள். மேலும் அவரே மணப்பெண்ணாகவும் இருந்தார்கள். மிகவும் எளிமையாக திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருமணத்திற்கான அழைப்பும் செய்யப்பட்டது. மணப்பெண் உணவும் சமைத்து அதை பரிமாறிக் கொண்டும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸஹல் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூ உஸைது (ரலி) அவர்களுக்கு முன்ஸிர் பின் அபூ உஸைது அவர்கள் பிறந்த போது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வரப்பட்டார். அன்னார் அக்குழந்தையை தமது மடியில் அமர வைத்தார்கள். இதற்கிடையில் நபி (ஸல்) அவர்கள் வேறொரு பணியில் மூழ்கிவிட்டார்கள். அப்போது மக்கள் முன்ஸிர் அவர்களை அன்னாரது மடியிலிருந்து எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் அந்த பணியை முடித்த பிறகு குழந்தை எங்கே? என்று வினவினார்கள். அதற்கு அபூ உஸைது அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அவனை வீட்டிற்கு அனுப்பி விட்டோம் என்று கூறினார். அதற்கு அன்னார் அவனுக்கு என்ன பெயர் வைத்துள்ளீர்கள்? என்று வினவினார்கள். அபூ உஸைது அவர்கள் இன்ன பெயரை வைத்துள்ளேன் என்று ஒரு பெயரை கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை; அவனது பெயர் முன்ஸிர் ஆகும் என்று கூறி அவனுக்கு முன்ஸிர் என்று பெயர் வைத்தார்கள்.

ஹஸ்ரத் சுலைமான் பின் யஸார் அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களது ஷஹாதத்திற்கு முன்பு ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் பார்வையை இழந்தார்கள். அன்னார் இவ்வாறு கூறி வந்தார்கள். அல்லாஹ்விற்கு நன்றி! அந்த இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருளுக்குரிய காலத்தில் எனக்கு பார்வையை வழங்கியிருந்தான். மேலும் அந்த அனைத்து அருட்களையும் நான் பார்த்தேன். ஆனால் எப்போது அல்லாஹ் மக்களை சோதனையில் போட நினைத்தானோ அப்போது நான் இந்த தீய நிலைமைகளை பார்க்கக் கூடாது என்பதற்காக எனது பறித்து விட்டான்.

மர்வான் பின் அல்ஹகம் ஹஸ்ரத் அபூ உஸைது ஸாஅதி அவர்களை ஸதகா விநியோகம் செய்வதற்கு பணியாளராக நியமித்திருந்தார்கள். (அதாவது சதகாவை ஒன்று சேர்க்கவும் அதை விநியோகம் செய்யவும் நியமித்தார்கள்). ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் ஒரு முறை ஸக்காத்தை விநியோகம் செய்ய வந்தார்கள். அனைத்த பொருட்களையும் எல்லாம் விநியோகம் செய்து விட்டு சென்று விட்டார்கள். வீட்டிற்கு சென்று தூங்கி விட்டார்கள். அப்போது கனவில் ஒரு பாம்பு அவர்களது கழுத்தை சூழ்ந்திருதாக பார்த்தார்கள். அவர்கள் பதற்றமடைந்தவாறு எழுந்தார்கள். அப்போது கனவில் தனது மனைவியிடம் ஏதாவது

பொருள் விநியோகம் செய்யப்படாமல் இருக்கின்றதா? என்று வினவினார்கள். அதற்கு அவர்கள் இல்லை என்று கூறினார்கள். அதற்கு அபூ உஸைது அவர்கள், பிறகு ஏன் பாம்பு எனது கழுத்தை சூழ்ந்துள்ளது? ஏதாவது இருக்கின்றதா? என்று பாருங்கள் என்று கூறினார்கள்.அவர்கள் பார்த்த போது ஒட்டகத்தை கட்டக்கூடிய ஒரு கயிறு இருக்கின்றது என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் அந்த கயிறையும் அவர்களிடம் திரும்ப கொடுத்து விட்டார்கள்.

ஹுஸூர் கூறுகின்றார்கள். அல்லாஹ் இந்த சஹாபாக்களை இறையச்சத்தின் நுட்பமான வழிகளை கடைபிடிக்கச் செய்து அமானிதங்களை செலுத்துவது தொடர்பான உயர்தரமான படித்தரங்களை நிலைநாட்ட விரும்பினான். இதன் விளைவாகவே கனவுகளிலும் கூட இவர்களுக்கு வழிகாட்டப்பட்டது.

ஒரு முறை சில இளைஞர்கள் அபூ உஸைது அவர்களிடம் அன்ஸார்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய மேன்மைகளை எடுத்துரைக்கும் படி கேட்டார்கள். அதற்கு அவர்கள் கூறினார்கள். நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். அதாவது அன்ஸார் கோத்திரத்தை சார்ந்தவர்களில் மிகவும் சிறந்தவர்கள் பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவர்கள் ஆவர். அடுத்து பனூ அப்துல் அஷல், அடுத்து பனூ ஹாரிஸ் பின் ஹஸ்ரஜ் பிறகு பனூ ஸாஅதா ஆகும். மேலும் அனைத்து அன்ஸார் வீடுகளிலும் அருட்கள் இருக்கின்றது என்று கூறினார்கள்.

இரண்டாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது ஆகும். இவரது பெயர் அப்துல்லாஹ் ஆகும். பட்டப்பெயர் அபூ சலமா ஆகும். அன்னாரது தாயின் பெயர் பர்தா பின்த் அப்துல் முத்தலிப் ஆகும். அன்னார் நபி (ஸல்) அவர்களது பெரியம்மா மகன் ஆவார். மேலும் நபி (ஸல்) மற்றும் ஹஸ்ரத் ஹம்ஸா ஆகியோரது பால்குடி சகோதரர் ஆவார்.

அன்னார் அபூ லஹபின் அடிமைப் பெண்ணான சுவைபாவிடமிருந்து பால் அருந்தியுள்ளார்கள். ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் உம்மே சல்மா அவர்கள் முதலில் அன்னாரை திருமணம் செய்திருந்தார்கள். அவர்களது மரணத்தினால் அன்னாரது விதவை மனைவியான உம்மே சல்மா அவர்களுடன் நபி (ஸல்) அவர்களது திருமணம் நடைபெற்றது. ஹஸ்ரத் அப்துல்லாய் பின் அப்துல் அஸது அவர்கள் இஸ்லாத்தை ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொண்ட மனிதர்களில் ஒருவர் ஆவார்கள்.

இப்னு இஸ்ஹாக்கின் கூற்றின் அடிப்படையில் அன்னார் முதல் பத்து நபருக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றார்கள். அதாவது ஆரம்ப கால முஸ்லிம்களைச் சார்ந்தவர் ஆவார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது அவர்கள் தமது மனைவியான ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்களுடன் முதல் ஹிஜ்ரத்தான ஹப்ஷாவில் உடன் இருந்தார்கள். ஹப்ஷாவிலிருந்து மக்கா திரும்பி வந்த பிறகு மதீனா ஹிஜ்ரத் செய்தார்கள்.

முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்கள் அதன் உச்சத்தை அடைந்த போது நபி (ஸல்) அவர்கள் யாரெல்லாம் ஹப்ஷாவிற்கு ஹிஜ்ரத் செய்ய இயலுமோ அவர்கள் செல்லுங்கள் என்று கூறினார்கள். எனவே அன்னார் கூறியதற்கிணங்க நபித்துவத்தின் 5 வது வருடத்தின் ரஜப் மாதத்தில் 11 ஆண்கள் 4 பெண்கள் ஹப்ஷாவிற்கு ஹிஜ்ரத் செய்தனர்.

அவர்களில் புகழ்பெற்ற நபர்களின் பெயர் இதுவாகும். உஸ்மான் பின் அஃபான். மேலும் அவர்களது மனைவியான ருகிய்யா பின்த் ரஸூலுல்லாஹி (ஸல்), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், சுபைர் பின் அல்அவாம், அபூ ஹுஸைஃபா பின் மஸ்வூன், மஸ்அப் பின் உமைர், அபூ சலமா பின் அப்துல் அஸது மற்றும் அவர்களது மனைவியான ஹஸ்ரத் உம்மே சல்மா ஆகியோர் ஆவர்.

ஹுஸூர் கூறினார்கள்: வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், ஆரம்ப கால முஹாஜிரீன்களில் அதிகமான எண்ணிக்கை கொண்ட மக்கள் குரைஷிகளின் வலிமைமிக்க கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். பலவீனமான மக்கள் குறைவாகவே தென்படுகின்றனர். இதிலிருந்து இரண்டு விஷயம் தெளிவாகின்றது. ஒன்று வலிமைமிக்க கோத்திரத்தைச் சார்ந்த மக்களும் கூட குரைஷிகளின் அநீதியிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. இரண்டாவதாக, பலவீனமான மக்கள் அதாவது அந்த நேரத்தில் அந்த அடிமைகள் எந்த அளவு பலவீனமாவர்களாக இருந்தார்கள் என்றால் அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கான ஆற்றல் கூட இருக்கவில்லை.

குரைஷிகளுக்கு இதனைப்பற்றி தெரிய வந்த போது அவர்கள் மிகவும் கோபமடைந்தார்கள். ஹப்ஷாவிற்கு சென்றவுடன் முஸ்லிம்களுக்கு மிகவும் நிம்மதி நிறைந்த வாழ்க்கை அமைந்தது. இறைவனது அருளால் குரைஷிகளின் அநீதிகளிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைத்து.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் அபூ சலமா அவர்கள் ஹப்ஷாவிலிருந்து திரும்பி வந்து ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களிடம் அடைக்கலத்தை வேண்டினார்கள். அப்போது பனூ மக்ஸூமைச் சார்ந்த சில நபர்கள் அபூதாலிபிடம் வந்து, நீங்கள் உங்களது சகோதரரின் மகன் முஹம்மது (ஸல்) அவர்களை உங்களது அடைக்கலத்தில் வைத்துள்ளீர்கள். எனவே எமது சகோதரரான அபூ சலமாவிற்கு நீங்கள் ஏன் அடைக்கலம் கொடுத்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு அபூ தாலிப் அவர்கள், அவர் என்னிடம் அடைக்கலம் வேண்டினார். மேலும் அவர் எனது மருமகனும் ஆவார். நான் எனது சகோதரரின் மகனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கவில்லை என்றால் எனது மருமகனுக்கும் கொடுத்திருக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள். உம்முல் முஃமினீன் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள். எனது கணவர் ஹஸ்ரத் அபூ சலமா அவர்கள் மதீனா செல்வதற்கு முயற்சி செய்தார்கள். மேலும் அதற்காக தமது ஒட்டகத்தை ஆயத்தம் செய்தார்கள். என்னையும் எனது கைக்குழந்தையாக இருந்த மகன் சலமாவையும் அதில் பயணம் செய்ய வைத்தார்கள். எனவே நாங்கள் சென்றோம். முன்னேறிச் சென்ற போது பனூ மக்ஸூமைச் சார்ந்த சிலர் எங்களை முற்றுகையிட்டனர்.

மேலும் அவர்கள், உம்மே சல்மா எங்களது மகளாவாள். அவளை உங்களுடன் நாங்கள் அனுப்ப மாட்டோம் என்று கூறினர். ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் எனது கணவரை என்னிடமிருந்து பிரித்து விட்டனர். ஹஸ்ரத் அபூ சலமா அவர்களின் கோத்திரமான பனூ அப்துல் அஸதை சார்ந்த மக்கள் இதன் காரணமாக மிகவும் கோபமடைந்தார்கள். எனவே அவர்கள், இக்குழந்தை அபூ சலமாவுடையதாகும். அவனை நாங்கள் உம்மிடம் கொடுக்க மாட்டோம் என்று கூறினர். எனவே அவர்கள் எனது குழந்தையை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

அந்த பெண்ணை அவர்களது கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் வைத்துக் கொண்டார்கள். அந்த குழந்தையை அந்த ஆணின் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் கொண்டு சென்று விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள். நான் முற்றிலும் தனித்தவளாகி விட்டேன். ஒரு வருடம் வரை இதே துன்பத்தில் நான் பீடிக்கப்பட்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் அப்தா என்ற இடத்திற்கு சென்று அழுதேன். ஒரு நாள் எனது சிறிய தந்தையின் மகன்களில் ஒருவன் நான் அங்கு அழுது கொண்டிருப்பதை கண்டான். எனவே என்மீது அவனுக்கு கருணை ஏற்பட்டது. அவன் பனூ முகைரா என்ற எனது கோத்திரத்தினரிடம் சென்று, நீங்கள் ஏன் அந்த ஏழைப் பெண்மணியை கொடுமைப்படுத்துகின்றிர்கள். நீங்கள் அவளை அவளுடைய கணவர் மற்றும் குழந்தையிடமிருந்து பிரித்து விட்டீர்கள். அவளை விட்டுவிடுங்கள் என்று கூறினார். அதன் அடிப்படையில் அவர்கள் என்னிடம், நீ உமது கணவரிடம் செல் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா கூறுகின்றார்கள். இதற்குப் பிறகு எனது மகனை அப்துல் அஸது எனக்கு திருப்பி கொடுத்து விட்டார். பிறகு நான் எனது ஒட்டகத்தை ஆயத்தம் செய்தேன். எனது குழந்தையுடன் அதில் பயணத்தேன். நான் மதீனா சென்ற போது எனக்கு உதவியாளராக யாரும் இருக்கவில்லை. தன்யீம் என்ற இடத்தை நான் அடைந்த போது அங்கு எனக்கு ஹஸ்ரத் உஸ்மான் பின் அபூ தல்ஹா கண்டேன். (அவர்கள் அந்த நேரத்தில் முஸ்லிமாகவில்லை. ஹிஜ்ரி ஆறாவது ஆண்டில் இஸ்லாத்தை தழுவினார்கள்)

அவர் என்னிடம், உம்மே சல்மாவே! உம்முடன் யாராவது இருக்கின்றார்களா? என்று வினவினார். அதற்கு நான், இறைவன் மீது ஆணையாக! எனது இந்த மகன் மற்றும் இறைவனைத் தவிர என்னுடன் வேறு யாருமில்லை என்று கூறினேன். அதற்கு உஸ்மான் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உம்மை தன்னந்தனியாக ஒருபோதும் செல்ல விடமாட்டேன். நான் உம்முடன் வருகின்றேன். பிறகு அவர்கள் எனது ஒட்டகத்தின் மூக்கில் கட்டப்பட்டிருந்த கயிற்றை பிடித்தார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அரபு நாட்டில் இத்தகைய கண்ணியமிக்க ஒரு நபரை பார்த்ததில்லை. புறப்படக்கூடிய நேரம் வந்தால் அவர்கள் ஒட்டகத்தை ஆயத்தம் செய்வார்கள். பிறகு நான் அதில் பயணம் செய்வேன். அவர்கள் ஒட்டகத்தின் மூக்கில் கட்டப்பட்டிருந்த கயிற்றை பிடித்தவாறு நடந்து வருவார்கள். எதுவரை என்றால் நாங்கள் மதீனா சென்றடைந்தோம். ஹிஜ்ரத்தின் இரண்டாவது ஆண்டில் நபி (ஸல்) அவர்கள் அஷீரா போருக்காக சென்ற போது அபூ சலமா அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள்.

ஹிஜ்ரி நான்காவது ஆண்டில் முஹர்ரம் மாதத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு மதீனாவில் ஓர் செய்தி கிடைத்தது. அதாவது அஸது கோத்திரத்தைச் சார்ந்த தலைவரான தல்ஹா பின் ஹவேலத் மற்றும் அவருடைய சகோதரரான சல்மா பின் ஹவேலத் ஆகிய இருவரும் தமது பகுதி மக்களை நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக போர் செய்வதற்கு ஆயத்தப்படுத்துகின்றார் என்ற செய்தி கிடைத்தது. இந்த செய்தி கிடைத்ததுமோ அன்னார் 150 சஹாபாக்களை கொண்ட ஒரு படையை ஆயத்தம் செய்து அவர்களுக்கு அபூ சலமா பின் அப்துல் அஸதை அமீராக நியமித்தார்கள். மேலும் பனூ அஸது தமது சூழ்ச்சிகளை நிறைவேற்றுவதற்கு முன்பாகவே அவர்களை சிதறடித்து விடுமாறு அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அபூ சலமா அவர்கள் கதன் என்ற இடத்திலிருந்த பனூ அஸதை முற்றுகையிட்டார்கள். ஆனால் எவ்வித போரும் நடைபெறவில்லை.

மேலும் அபூ சல்மா அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு மதீனா திரும்பி வந்தடைந்தார்கள். இந்த பயணத்தில் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டதனால் அபூ சலமா அவர்களுக்கு உஹது போர்க்களத்தில் ஏற்பட்ட காயமானது வெளிப்படையாக குணமாகி விட்டதைப் போல் தென்பட்டிருந்தாலும் அது மீண்டும் சீர்குலைந்தது. சிகிச்சை செய்த போதிலும் அது சீர்குலைந்து கொண்டே சென்றது. எனவே இறுதியாக இந்த நோயிலேயே பரிசுத்தமான, பழைய மற்றும் நபி (ஸல்) அவர்களின் பால்குடி சகோதரரான அந்த சஹாபி மரணமடைந்தார்கள். அவர்கள் மதீனாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ சலமா அவர்கள் மரண தருவாயில் இருந்த போது இவ்வாறு துஆ செய்தார்கள். என்னுடைய இறைவா! எனது குடும்பத்தில் எனது பிரதிநிதியாக சிறந்த மனிதரை நியமிப்பாயாக என்று துஆ செய்தார்கள். மேலும் இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சல்மாவை திருமணம் செய்தார்கள்.

உம்மே சல்மா அவர்கள் குரைஷிகளின் கண்ணியமிக்க ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் மிகவும் புரியும் திறன் கொண்ட திறமை வாய்ந்த பெண்மணி ஆவார்கள். அதுமட்டுமின்றி நம்பிக்கையிலும், நிச்சய உறுதியிலும் ஒரு உயர்தரமான அந்தஸ்தை பெற்றிருந்தார்கள். உம்மே சல்மா அவர்களுக்கு படிக்கவும் தெரியும். மேலும் முஸ்லிம் பெண்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத்தில் அவர்கள் மிகச் சிறந்த பங்கை வழங்கியுள்ளார்கள்.

ஹதீஸ் நூல்களில் அவர்கள் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்ட பல அறிவிப்புகளும் ஹதீஸ்களும் இடம் பெற்றுள்ளது. இந்த அடிப்படையில் இவர்களது அந்தஸ்து நபி (ஸல) அவர்களது மனைவிமார்களில் இடண்டாவது இடத்தையும், ஆண்கள், பெண்கள் என ஒட்டுமொத்த சஹாபாக்களில் அன்னார் 12 வது இடத்தையும் பெற்றிருந்தார்கள்.

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நமக்கும் இந்த மக்கள் செய்த நன்மைகளை செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். இப்போது நான் வஃபாத்தான சிலரது அறிவிப்பை செய்வேன். தொழுகைக்குப் பிறகு அவர்களது ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன்.

இவர்களில் முதலாவது நபர், வாழ்க்கையை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய ராஜா நஸீர் அஹ்மது சாஹிப் நாஸிர் ஆகும். அன்னார் முரப்பி ஆவார். முன்னாள் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாதாகவும் தொண்டாற்றியுள்ளார்கள். ஜூலை 6 ஆம் தேதி காலை 11 மணி அளவில் தமது 80 வது வயதில் அன்னார் தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் வஃபாத்தானார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஹூன்.

அன்னார் 1938 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் தேதி சர்கோதா மாவட்டத்திலுள் பேரா என்ற இடத்தில் பிறந்தார்கள். 1958 ஆம் ஆண்டு அவர்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். ஜாமிஆவில் படிப்பை முடித்த பிறகு 47 வருடங்கள் வரை அன்னார் ஜமாஅத்திற்கு தொண்டாற்றியுள்ளார்கள். பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் முரப்பியாக தொண்டாற்றியுள்ளார்கள். 2012 ல் அன்னார் ஓய்வு பெற்றார்கள். திருக்குர்ஆன் ஓதுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிந்தார்கள். தமது குழந்தைகளிடம் ஒருபோதும் ஷிர்க் வைக்கக்கூடாது என்றும் அஹ்மதிய்யா கிலாஃபாத்தோடு பற்றுள்ளவர்களாக திகழ வேண்டும் என்று போதனை செய்து வந்தார்கள். மேலும் அவர்கள் தாமும் இந்த விஷயத்தின் அடிப்படையில் தமது வாழ்க்கையை கழித்தார்கள்.

அல்லாஹ் அன்னாருக்கு மக்ஃபிரத்தை வழங்குவானாக. மேலும் அவர்களுடைய சந்ததிகளுக்கும் அவர்கள் விட்டுச் சென்ற நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேற்றை வழங்குவானாக. ஆமீன்

அடுத்து இரண்டு ஷஹீதுகளின் ஜனாஸா தொழகையும் தொழ வைப்பேன். அவர்களில் ஒருவர் மஹ்பூப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான ஷஹீது முபீன் அஹ்மது சாஹிப் ஆவார்கள். இரண்டாவது நபர் இப்னு லியாகத் அலி சாஹிப் அவர்களின் மகனான முஹம்மது ஜஃபருல்லாஹ் சாஹிப் ஆவார்கள்.

ஜூலை 7, 2018 அன்று ஏறக்குறைய மதியம் 3 மணி அளவில் கராச்சியிலுள்ள வேடா சோக் என்ற இடத்தில் கொள்ளையர்கள் முபீன் அஹ்மது சாஹிப், முஹம்மது ஜஃபருல்லாஹ் சாஹிப் மற்றும் முஹம்மது நஸருல்லாஹ் சாஹிப் ஆகிய மூன்று அஹ்மதி குத்தாம்களை சுட்டார்கள். அதன் விளைவாக அவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டது. அவர்களில் முபீன் அஹ்மது சாஹிப் மற்றும் ஜஃபருல்லாஹ் சாஹிப் ஷஹீதானார்கள்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மூன்றாவது நபரான ஹாபிழ் நஸ்ருல்லாஹ் சாஹிப் அவர்களுக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் முழுமையான உடல்நலத்தை வழங்குவானாக. மேலும் இந்த மர்ஹூம்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் அவர்களது குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

**மொழியாக்கம் : முஅல்லிம் அ.கலீல் அஹ்மது**